

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2023) திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களின் 91–வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் மனைவி திருமதி வீ. மோகனா அம்மையார் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## நீட் விலக்குக்கோரி

# 55 லட்சம் கையெழுத்து !

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, டிச.3–

நீட் விலக்கை வலியுறுத்தி, தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவர் அணி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

50 லட்சம் கையெழுத்துக்களை பெற வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இதுவரை 55 லட்சம் கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த கையெழுத்து நீட் விலக்கு பெறுவதற்கு அடித்தளமாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



## அயோத்திதாசப் பண்டிதரின் சிந்தனைகள்

# தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ‘ட்விட்டர்’ பதிவு!

**சென்னை, டிச. 3–**

**“திராவிடப் பேரொளி” அயோத்திதாசப் பண்டிதரின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபம், கழக அரசின் சார்பில் சென்னை - கிண்டியில் அமைக்கப்பட்டு அதனை நேற்று தாம் திறந்து வைத்த நிகழ்வையொட்டி ‘ட்விட்டர்’ பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “புத்தரை ‘இரவு பகலற்ற ஒளி’ எனப் போற்றிய அயோத்திதாசப் பண்டிதரின் சிந்தனைகளும், அத்தகைய ஒளியாகத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படட்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**



முதல்வர் அவர்களின் அப்பதிவு வருமாறு:-

தமிழன், திராவிடன் ஆகிய இரண்டையும் அரசியல்களத்தில் அடையாளச் சொற்களாக மாற்றிய ‘திராவிடப் பேரொளி’ அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திறந்து வைத்தேன்.

அயோத்திதாசரின் நூல்கள் நாட்டுடைமை.

ரூ.10 லட்சம் பரிவுத்தொகை வழங்கல்.

அயோத்திதாசர் அஞ்சல் தலை வெளியீடு.

அவர் நடத்திய தமிழன் இதழுக்கு நூற்றாண்டு விழா.

அவர் பெயரிலான சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்துக்கு நிலம் ஆகியவற்றை நிறைவேற்றியது தி.மு.க ஆட்சியே!

ஆதி திராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த “அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்” வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் நமது திராவிட மாடல் அரசால் செயல்படுத்தப்பட உள்ளது.

புத்தரை ‘இரவு பகலற்ற ஒளி’ எனப் போற்றிய பண்டிதரின் சிந்தனைகளும் அத்தகைய ஒளியாகத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படட்டும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி கழக இளைஞரணி 2 வது மாநில மாநாடு நடைபெறும் பணிகளை அமைச்சர் முத்துசாமி, கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். அருகில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜோயல், சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் பாபு (எ) வெங்கடேஷ்வரன், வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




